**கரும்பு ஆராய்ச்சி நிறுவகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களுக்கான முறையே ரூபா 6,472,579 மற்றும் ரூபா 1,381,022 தொகைகளான ரூபா 7,853,601 கூட்டுத்தொகையான 2011 ஆம் ஆண்டிற்கான வட்டி 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட பொறுப்புக்களின் கீழும் பெறவேண்டிய வட்டியின் கீழும் காட்டப்பட்டிருந்தன.

## 1.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

### 1.3.1 பெறவேண்டிய கணக்குகள்

---

ரூபா 1,815,445 தொகையான கடன்பட்டோர் ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக இருந்ததுடன் ரூபா 5,100 தொகையான கடன்பட்டோர் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தன.

### 1.3.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

---

இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 2,700,020 தொகை 5 ஆண்டுகளுக்கு மேல் காணப்பட்டிருந்தும் அக்கடனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் இன்மை

---

முறையே ரூபா 4,820,545 மற்றும் ரூபா 4,278,440 தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிராததன் காரணமாக அவற்றின் சரியான தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2005 திசெம்பர் 9 ஆந் திகதிய 33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது நிறுவகத்தின் நிதியிலிருந்து ரூபா 32,000,113 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

### 2.1 நிதிசார் மீளாய்வு

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகள் ரூபா 29,929,279 மிகையினை விளைவித்துள்ளதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 24,987,470 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகள் ரூபா 4,941,809 தொகையால் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டியிருந்தது. 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டின் செஸ் வருமானம் ரூபா 13,022,567 ஆல் அதிகரிப்பு மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சியம்பலாண்டுவவில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவகத்தினால் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அக்காணியின் சட்டரீதியான உரித்தை நிறுவகத்திற்கு ஒப்படைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி ஒரு மோட்டார் சைக்கிளும் ஒரு பயணிகள் பஸ் வண்டியும் கொள்வனவு செய்யப்படுவதற்கு முறையே ரூபா 3 மில்லியனுக்கும் ரூபா 3.5 மில்லியனுக்கும் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் இதனைக் கருத்திற்கொள்ளாது முறையே ரூபா 5 மில்லியனும் ரூபா 7.9 மில்லியனும் செலவிட்டு மேற்குறித்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லை ரூபா 6.4 மில்லியனால் மிகைத்து செலவிடப்பட்டிருந்தது.

### 2.3 பயன்படுத்தப்படாத சொத்துக்களும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களும்

ரூபா 02 மில்லியன் தொகையைச் செலவிட்டு தயாரிக்கப்பட்டிருந்த மீருட் அடுப்பு பயன்பாட்டிற்கு எடுக்காது விளைவற்றுக்காணப்பட்டது. இதற்குப் பதிலாக கருப்பஞ் சர்க்கரை உற்பத்திக்காக பாரம்பரிய அடுப்பு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.4 சீனி உற்பத்தி மற்றும் இறக்குமதி

கரும்புப் பயிரீடு மற்றும் விளைச்சல் தொடர்பாகவும் அதன் மூலம் ஏதேனும் தயாரிப்புகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதன் மூலம் கரும்பு உற்பத்தியின் வினைதிறன அதிகரிப்பது கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டதன் ஒரு பிரதான நோக்கமான போதிலும் மீளாய்வாண்டின் போது அந் நோக்கம் எய்தப்பட்டுள்ளதா என்பது சிக்கலானதாகக் காணப்பட்டது. உள்நாட்டு சீனி உற்பத்தியும் சீனி இறக்குமதியின் அளவும் தொடர்பான கடந்த 11 ஆண்டுகளின் தரவுகள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | உள்நாட்டு சீனி உற்பத்தி | இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவு | சீனியின் மொத்த அளவு | சீனியின் மொத்த அளவில் உள்நாட்டு சீனி உற்பத்தியின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | மெட்ரிக் தொன் | மெட்ரிக் தொன் | மெட்ரிக் தொன் | % |
| 2000 | 48,000 | 562,000 | 610,000 | 7.87 |
| 2001 | 64,000 | 420,000 | 484,000 | 13.22 |
| 2002 | 39,000 | 554,000 | 593,000 | 6.58 |
| 2003 | 54,000 | 509,000 | 563,000 | 9.59 |
| 2004 | 60,000 | 438,000 | 498,000 | 12.05 |
| 2005 | 54,000 | 418,000 | 472,000 | 11.44 |
| 2006 | 56,000 | 525,000 | 581,000 | 9.64 |
| 2007 | 30,000 | 481,000 | 511,000 | 6.24 |
| 2008 | 39,000 | 575,000 | 614,000 | 6.35 |
| 2009 | 32,000 | 467,000 | 499,000 | 6.41 |
| 2010 | 31,500 | 559,000 | 590,500 | 5.33 |

மேற்குறித்த தரவுகளின் பிரகாரம், இலங்கையில் சீனிக் கைத்தொழில் 04 தசாப்தங்களுக்கு அதிகமாகக் காணப்பட்ட போதிலும் உள்நாட்டு சீனி உற்பத்தியானது நாட்டின் மொத்த சீனி தேவைப்பாட்டின் ஏறத்தாழ 7% அளவிலான குறைந்த அளவு பங்களிப்பைச் செய்திருந்தமை கடந்த 04 ஆண்டு கால தரவுகளில் இருந்தான அவதானிப்புகளில் தெளிவாகியுள்ளன.

## 2.5 செயற்திட்டத்தினை அமுல்படுத்தல்

(அ) மீளாய்வாண்டின் போது கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 25,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் முற்றாக கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தில் அமுல்படுத்தப்பட்ட பின்வரும் செயற்திட்டங்களின் செயலாற்றல் மிகவும் குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்தன விபரம் பின்வருமாறாகும்.

| செயற்திட்டம் | பாதீட்டின் பிரகாரமான ஒதுக்கீடு | 2010.12.31 இல் உள்ளவாறான உள்ளபடியான வருமானம் / செலவினம் | நிதிசார் செயலாற்றல் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கரும்புப் பயிர்கள் மற்றும் தண்டுகளின் விற்பனை | 1,500,000 | 487,585 | 33 |
| உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | | | |
| ஆராய்ச்சிப் பொருட்கள்<br>பசளை<br>ஏனையவை | 6,585,000 | 3,234,853 | 49 |
| பதவியணியினரைப் பயிற்றுவித்தல் | 500,000 | 70,564 | 14 |

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பதவியணி

(இ) செயற்திட்ட அமுலாக்கம்

(ஈ) சொத்துக்களின் பயன்பாடு